மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிச்சயமாக அவருடைய உணர்வுகளை நான் மதிக்கிறேன். உடனடியாக அது குறித்து நடவடிக்கை எடுக்கிறேன், ஆனால் இப்படிப்பட்ட பிரச்னைகளைப் பற்றி கேட்க நான் கேள்வி நேரத்தில் அனுமதிப்பது கிடையாது. அவர் கேள்வி நேரத்திற்குப் பிறகு இதை கிளப்பி இருக்கலாம். அவருடைய உணர்வுகளை மதித்துத்தான் அவரை அனுமதித்தேனே தவிர இந்த முறையை எப்போதுமே இந்த அவை கடைப்பிடித்தது இல்லை. இருந்தாலும் அவர் எழுப்பிய பிரச்னையை நான் கவனிக்கிறேன். உறுப்பினர் வெளியே இருந்தால், உள்ளே வரும்படி அன்புடன் அழைக்கிறேன்.

(2) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*குறுகிய கால வினா எண் 24—திரு. பி. ராமதாஸ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியாற்றிலிருந்து நீரேற்று நிலையம் அமைத்து கடாம்புச்சேரி, நாகலாபுரம், குந்தலச்சேரி, இலமலை, இல்லமரத்துப்பட்டி, சங்கராபுரம் ஆகிய வறண்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழுது நடைமுறைப் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. பி. ராமதாஸ் : தலைவர் அவர்களே, மேற்கூறிய கிராமங்கள் எல்லாம் மிகவும் வறட்சியால் கடந்த 10—15 ஆண்டு காலமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. குடிக்கக்கூட நீர் இல்லாத நிலையிலே அங்கே உள்ள மக்கள் அவதியுறும் நிலை இருக்கிறது. அதை நானே கண்ணால் கண்டு இருக்கிறேன். மேலும் அங்கே நமது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு இருந்தாலும் கோடை காலங்களில் அவைகள் எல்லாம் பயன் அற்று இருக்கிற நிலையில் தாங்கள் இப்படி ஒரு திட்டத்தை அங்கே ஏற்படுத்தினால் அங்கே இருக்கும் மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்பதை அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 26]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த ஊர்களில் நாகலாபுரம் கிராமம் பிரிவு 2-ல் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரிவு இரண்டு என்று சொன்னால் தண்ணீர் இருக்கும், குடிக்க முடியாது, சலைன் வாட்டர், பிராக்கிஷ் வாட்டர் ஒரு கிலோ மீட்டருக்குள் இருக்கும், குடிக்க முடியாது, இதற்கு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆழ் துளைக் கிணறு அமைத்து, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, நல்ல முறையில் குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. எஞ்சியுள்ள கிராமங்களான கடாம்புச்சேரி, குந்தலச்சேரி, இலமலை, இல்லமரத்துப்பட்டி, சங்கரார்புரம் ஆகிய கிராமங்களுக்கு நீர் வழங்கும் திட்டம், பெரியாற்றிலிருந்து நீரேற்று நிலையம் அமைக்க, 6 வகையாகப் பிரித்து இருக்கிறோம். இந்த கிராமங்கள் 6-வது வகையைச் சேர்ந்தது. நீர் ஆதாரங்கள் கொண்ட சிறு கிராமங்கள் என்ற காரணத்தால் அவைகளுக்கு கொடுக்க இயலாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கோடை காலத்தில் தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள். இப்போது இந்த அரசு இந்த ஆண்டு தண்ணீர் இருந்து கோடை காலத்தில் வற்றிப் போய்விட்டது, குடிக்கக் கூட நீர் கிடைக்கவில்லையென்றால், அப்படிக் கிடைக்காத சிற்றூர்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு டைப் 3 என்ற ஸ்கீம் எடுத்துக்கொண்டு இருப்பதால், நான் சொல்வதற்கு மாறாக நீங்கள் குறிப்பிட்ட ஊர்களில் குடிக்கக் கூட தண்ணீர் கிடைப்பது இல்லை என்று எழுதிக் கொடுத்தால், அதற்கான அதிகாரிகளை அனுப்பி, பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுடைய கருத்துக்கள், அவருடைய உணர்வுகள் ஆகியவற்றை அரசுத் தரப்பில் கவனத்தில் எடுத்துக் கொண்டு, உடனடியாக பதில் அளிக்கவேண்டும். வேகத்தில் அவர் ** என்று அவர் கடைசியில் சொன்னதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ஆ. நடராசன் : திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் எத்தனையோ தடவை ** இருக்கிறார். அதை அனுமதித்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட நிகழ்ச்சி கேள்வி நேரத்தின் முன்பு அனுமதிப்பதே இல்லை. அவர் வருத்தப்பட்டுக் கொண்டார். ஆகவே, சொல்லட்டும் என்று அனுமதித்தேன். அவர் கடைசியில் ** மட்டும்தான் இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். திரு. கிட்டப்பா அவர்கள் பேசியது அத்தனையும் நீக்கவேண்டும் என்று சொல்லவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 மார்ச் 26

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திரு. கிட்டப்பா சொன்னது எந்தவிதத்திலும் அன்-பார்லிமெண்டரி கிடையாது. இந்த அவை எப்படி நடைபெறுகிறது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகத்தான் அவர் அப்படிச் செய்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கடைசியில் ** என்று சொன்னதைத்தான் நீக்கவேண்டும் என்று சொன்னேன். மற்ற விஷயங்களை வைத்து இருக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதே சட்டமன்றத்தில் ** அது அப்படியே பதிவேட்டில் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய முடிவு அது. கேள்வி நேரத்தின்போது இப்படிப்பட்ட பிரச்னைகள் அனுமதிப்பது இல்லை. என்னுடைய முடிவு ** தேவை இல்லை. அவைக்குறிப்பில் இருப்பது சரியல்ல. நீக்கவேண்டும் என்பதாகும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எதிர்க்கட்சிகளின் உரிமைகளை நீங்கள் காக்கவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அவர்களால் கொடுக்கப்பட்டவைகளை இங்கே எடுத்துக் கொள்ளவில்லை என்பதற்கு தன்னுடைய எதிர்ப்பைக் காட்டு வதற்காக இப்படி ** இருக்கிறார்கள். அதை அனுமதிக்கவேண்டும்.

[முற்பகல் 9.10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட நிகழ்ச்சி களை அவையில் அனுமதிக்க முடியாது. ** என்று சொன்னதை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். மற்றவை எல்லாம் அப்படியே இருக்கலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எங் களுடைய நியாயமான கோரிக்கைகள்கூட ஏற்றுக்கொள்ளப் படாமல் இருக்கின்றன. சபாநாயகருக்கு களங்கம் உண்டாக்க வேண்டுமென்பது எங்களுடைய எண்ணம் அல்ல. தங்களுக்குக் கட்டுப்படுகிறோம். ஆனால் அதேநேரத்தில் அரசாங்கத் தினுடைய நடவடிக்கையின் காரணமாக இந்தச் சட்டசபை இயங்குவது எங்களுக்குத் திருப்திகரமாக இல்லை என்பதால் எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் கேள்வி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நேரம் முடியும் வரையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றம் தொடங்கிய பிறகு எவ்வளவு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன ; எவ்வளவு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு விடை சொல்லப்பட்டிருக்கின்றன; எந்த அளவுக்கு ஒழுங்குப் பிரச்சனைகளுக்கு உரிமை தரப்பட்டிருக்கிறது என்பதையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எந்த அளவுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த அரசு எந்த அளவுக்கு நியாயமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் வந்து சபையில் அமர்ந்து, இந்த நடவடிக்கைகளில் பங்குகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை மறுநாள் அல்லது வியாழக்கிழமை அன்று கடந்த கால நிகழ்ச்சிகளையும், இந்தச் சட்டமன்றத்தில் நான் எந்த அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறேன் என்பதையும் காட்டுகின்ற வகையில் புள்ளிவிவரங்களைத் தயாரித்துத் தருகிறேன். இந்தச் சட்டமன்றத்தில் எந்த அளவுக்கு எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்பது அவைக் குறிப்பில் இருக்கிறது. அதை எடுத்துக் காட்டும்போது ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே ** என்று சொன்னதை நீக்க வேண்டும் என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் ** என்ற முறையில் சொன்னது இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது அவைக் குறிப்பில் இருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எடுத்துக்காட்டி உதவியதற்கு நன்றி. அதை ஒட்டி, சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டதையும் நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.